பாடம் 2
செய்யுளும் மொழியணியும்

4.7.5 ஐந்தாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**நடவடிக்கை 4**

சூழல்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்க.

அகிலன் : அமுதா, கொசுக்களால் நிறைய நோய்கள் பரவுகின்றன. கொசுக்களின் இனவிருத்தியைத் தடுக்க வேண்டும்.
அமுதன் : ஆமாம். வா வீட்டின் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்வோம்.



விமலா : யாழினி, உருவாக்கத் திறன் போட்டி நடைபெறவுள்ளது. அதனை உருவாக்குவதற்கு அதிக செலவாகுமே! உனக்குத் திறமை இருக்கிறது. ஆனால் பணத்திற்கு என்ன செய்வாய்?
யாழினி : பணமா? தேவையில்லை. நான் மறுபயனீட்டுப் பொருள்களைக் கொண்டே இயந்திர மனிதனை உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன்.

ரவி : எப்படி அத்திருடர்களிடமிருந்து தப்பித்தாய்?
ரகு : நான் அவர்களிடம் சண்டை போடாமல் சாதுரியமாகப் பேசித் தப்பித்தேன்.

புத்திமான் பலவான்

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

வெள்ளம் வருமுன் அணை போடு

LIVEWORKSHEETS